# மூன்று இடங்களில் பொம்மர் தாக்கு; யுவதி பலி

(யாழ்ப்பாணம்) யாழ். நகரிலும் - தென்மராட்சியிலும் மூன்று வெவ்வேறு இடங்களில் நேற்றுக் காலை நடைபெற்ற விமானக் குண்டுவீச்சில் இளம் யுவதி ஒருவர் பலியானார். பல வீடு (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 21 இதழ் 22
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 04 03 1993

## அரியாலை பகுதியில் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்) யாழ். நாவாந்துறைப் பகுதியில் குண்டு வீச்சை நடாத்திய இரு பொம்மர்களும் பின் அரியாலை பூம்புகார் பகுதியில் குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன. (4-ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியிலும் பொம்மர் தாக்கு

(யாழ்ப்பாணம்) தென்மராட்சிக் கடற்கரையோரப் பகுதியை நேற்றுக் காலை வட்டமிட்ட இருபொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியுள்ளன. தச்சன்தோப்பு, கோயிலாக் (4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் புலிகள் அதிரடி

# கடற்படைப்படகு தீப்பற்றியது

# அதிகாரி, பல படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு கடற்படைப் படகு ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் கடற்படைப் படகு தீப்பற்றி பெரும் புகையுடன் எரிந்தது. இந்தப் படகிலிருந்த கடற்படை அதிகாரி ஒருவர் உட்பட பல படையினர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (4-ம் பக்கம் பார்க்க)

## விமானப்படையின் உதவிக்கு கடற்படை அவசர கோரிக்கை

(கொழும்பு) கிளாலி கடல் நீரேரியில் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள விமானப்படையின் அவசர உதவியை கடற்படையினர் நாடியுள்ளனர்.

இத்தகவலை 'சண்டே ஐலன்ட்' தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நீரேரியில் விடுதலைப் புலிகள், ரேசந்து புகியும் கடற்படையினர் மீது 75 மீற்றர் அளவில் கிட்ட வந்து தாக்குதல் நடாத்தி பெரும் சேதம் பினர், கள் ஏற்படுத்தியுள்ளனர். இரவு நேரத்தில் கடற்படை விடுதலைப்புலிகளின் கடற்கண்ணியிலும் அகப்பட (4-ம் பக்கம் பார்க்க)

## இருபது படகுகள் மூழ்கடிப்பாம்?

(கொழும்பு) கிளாலி கடற்பகுதியில் நேற்று முன்தினம் இருபதிற்கும் மேற்பட்ட படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக கூட் (4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கான தனது ஆதரவை 'தொண்டா' விலக்குவாரா?

(கொழும்பு) எதிர்வரும் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கான தனது ஆதரவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் வழங்குமா அல்லது விலக்கிக் கொள்ளுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது பற்றி கட்சித் தலைவர் அமைச்சர் தொண்டமான் கூறுகையில்: மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கவுக்கா? அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கா ஆதரவு வழங்குவது அல்லது தனித்துப் போட்டியிடுவதா என இதுவரைமுடிவு செய்யவில்லை. மாகாண சபைக்கான தேர்தல் பற்றி உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்பே இதுபற்றி முடிவு (4-ம் பக்கம் பார்க்க)

## ஒத்துழையாமை இயக்கம் 'தொண்டா' ஆரம்பிப்பு

(கொழும்பு) 'ஒத்துழையாமை இயக்கம்' ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் தொண்டமான் அரசை மிரட்டியுள்ளார்.

தனியார் மயமாக்கப்பட்ட தோட்ட நிர்வாகங்கள், ஒரு மாதத்தில் வேலை நாட்களை 18 ஆகக் குறைத்ததை அடுத்தே அமைச்சர் அரச (4-ம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் தேர்தல்களில் ஒரு கோடி வாக்காளர்

(கொழும்பு) எதிர்வரும் தேர்தல்களில் இலங்கையில் ஒருகோடி மக்கள் வாக்களிக்க இருக்கின்றார்கள் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

★ இனப்பிரச்னை தீர்வு

## பிரபாவின் கருத்திற்கு நல்ல வரவேற்பு

(கொழும்பு) இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் வெளியிட்டுள்ள கருத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாக 'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன. (4-ம் பக்கம் பார்க்க)

## திருமலைக் காட்டில் பல முகாம்கள் வாபஸ்

(கொழும்பு) திருமலையில் காட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பல சிறிய இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர் பரீட்சை வினாத்தாள் வந்தது

(யாழ்ப்பாணம்) நாளை மறுதினம் (6ம் திகதி நடைபெறவுள்ள ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளன.

இவை குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு இன்று எடுத்து வரப்படும். (4ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கூட்டு தமிழ் கட்சிகள் குழப்பம்

(கொழும்பு) எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது எதிரணிகளுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது சகல தமிழ் கட்சிகளும் இணைந்து போட்டி (4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராகப் போராட எதிர்கட்சிகள் கூட்டுமுன்னணி

(கொழும்பு) அரசுக்கு எதிராகப்போராட ஐந்து முக்கிய எதிர்க்கட்சிகள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளன.

உடனடியாக இந்த கூட்டு முன்னணியை தேர்தல் ஆணையகத்தில் பதிவு செய்வதென்று, நேற்று திருமதி சிறிமா தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**வல்லாரைக் குளிகை**

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-7260]

**5-3-93ல் சனி மாற்றம்**

14-3-93இல் செவ்வாய் மாற்றம் 1-6-93 வரை வியாழ வக்கிரம் ரூபா 8-50. எங்கும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof. சந்தியதாஸன். [சி-7284]

**கரிசலாங்கண்ணி மூலிகை**

பல்திறன் கொண்டது கரிசலாங்கண்ணி மூலிகை. பால்மா வெற்றுப்பக்கற் 10 நேரில் சேர்ப்பித்து ஒரு நாற்றங்கால் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற் [ஏ-2930]


## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். கிளையூடாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் கைதடி நுணாவிலில் உள்ள ரயர் தொழிலக அகதி முகாம் அகதிகளுக்கு புடவைகளை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இறுதிப் போட்டிகள் இம்மாதம் 7ம் திகதி சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## இராசி பலன்

**04-03-1993**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு மாசி 21)**

ஏகாதசி ந. இ. 12-44 வரை: புனர்பூசம் பி. இ. 2-03 வரை: இராகுகாலம் நண்பகல் 1-57 முதல் 3-27 வரை சுபநேரம் உ. லெ 7.57 முதல் 9-27 வரை அமிர்த யோகம் ஏகாதசி விரதம்.

மேடம்: கௌரவ செலவுகள், குடும்ப உறவு, கல்விச் சிறப்பு.

இடபம்: தொழில் சிறப்பு, கருத்து வேற்றுமை, பயணம்

மிதுனம்: மனத்தளர்ச்சி. குடும்ப பிரச்சினை, காரிய தாமதம்.

கடகம்: ஆரோக்கிய பாதிப்பு, அயராத உழைப்பு. பண முடை.

சிங்கம்: உறவினர்களுக்கு உபகாரம், அவசர பிரச்சினை, மனச்சுமை.

கன்னி: உத்தியோகப் பரிவு. அவசர உதவி, புண்ணிய கருமம்.

துலாம்: புதிய நோக்கு. சிறுநட்டம். முன்யோசனை.

விருச்சிகம்: அயலவர் துன்பம், காரியம் கைகூடாமை. கடித துன்பம்.

தனுசு: வசதிக்குறைவு. ஏமாற்றம். தொழில் பிரச்சினை

மகரம்: குடும்ப சந்தோசம் சுபகாரியம், கௌரவம்

கும்பம்: பொருள் இழப்பு. இளசனபகை, . . ச்சல்.

மீனம்: மருத்துவச்செலவு தெய்வதரிசனம், மனசலனம்.

ஜோதியர்

ஆங்கில ஆசிரியர்

## போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நாடுமுழுவதும் இடம்பெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள 250 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும் என்றும் சுமார் 45 ஆயிரம்பேர் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (க)

## ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் சி. சரவணபவன் தமது முப்பத்திரண்டு வருடகால ஆசிரிய சேவையிலிருந்து கடந்தமாதம் ஓய்வு பெற்றுள்ளார்.

சுன்னாகம் கந்தரோடையை சேர்ந்த இவர் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிற்பி என்ற புனைபெயரில் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதிவரும் இவரை தெரியாத எழுத்தாளர்கள் வாசகர்கள் இருக்க மாட்டார்கள்.

சமூகசமய பணிகளில் தீவிரமாக உழைத்துவரும் இவர் தொடர்ந்தும் மாணவ உலகுக்கு உதவ விரும்புவதாக கூறுகின்றார்.

## பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக்கிளைத் தலைமையலுவலகம் ஊர்காவற்றுறைப் பிரிவு நடாத்தும் தையல் கைப்பணிப் பொருட்காட்சி யாழ். கிளையில் நாளை 5ம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி 6ம் திகதி பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ப் பிரிவு நடாத்தும் தையல் பொருட்கண்காட்சியும் மலிவுவிற்பனையும் நாளை மறுதினம் 6ம் திகதி முற்பகல் 9 மணி முதல் 7ம் திகதி பிற்பகல் 5 மணி வரை இருதினங்களும் யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்

பாடசாலை கிரிக்கெட்

## பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் 4 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 220 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஆனந்தராசா மக்ஸி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 100 ஓட்டங்களைப் பெற்றார். இவருடன் இணைந்து துடுப்பாடிய வீரர் ஏயன் 34 நிமிடங்களில் 51 ஓட்டங்களை எடுத்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

யாழ். இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 98 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 91 ஓட்டங்களையும் பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி பந்து வீச்சாளர்களான வசந்தகுமார், பிரதீபன், மகேந்திரராஜா ஆனந், விக்கெட் காப்பாளர் நிஸாந்தன் ஆகியோர் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்கள். (வி)

## "சித்த வைத்திய துறைக்கு பலத்த பேரிழப்பாகும்"

(யாழ்ப்பாணம்)

"சித்த வைத்தியத்துறையில் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பியின் சேவை அளப்பரியது. இவரின் திடீர் இழப்பு சித்த வைத்திய துறையின் வருங்கால மாணவர்களுக்கு பேரிழப்பாகும்.

சித்த வைத்திய துறை இந்த நாட்டில் இருக்கும்வரை டாக்டர் இன்னுசித்தம்பியின் பெயர் நிலைத்திருக்கும்"

இவ்வாறு லங்கா ஆயுள்வேதக்கல்லூரியின் முன்னாள் அதிபர் டாக்டர் ஏ. வி. ராஜரட்ணம் மேற்படி கல்லூரியில் நேற்று நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கூறினார்.

காலஞ்சென்ற சுகந்தன் இன்னுசித்தம்பின் பூதவுடல் நேற்றுக் காலை யாழ். நகர் பிரதான வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து ஊர்வலமாக யாழ். அடைக்கல நாயகி தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு ஸ்ரான்லி வீதியிலுள்ள லங்கா சித்த வைத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டு மாணவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அஞ்சலிக்கூட்டத்தில் சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் பவானி, வட இலங்கை சுதேசிய வைத்திய சங்க தலைவர் டாக்டர் எம். எஸ் சுந்தரம், யாழ் மாநகர சபை சித்த வைத்தியர் டாக்டர் ராமநாதன், யாழ். கோட்டம் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதம், தொழில் அதிபர் க. கனகராசா உட்பட பலர் உரையாற்றினார்கள். (வி-ரி)


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் மாணவர் அனுமதி - 1992

1. 1990 ஆகஸ்ட்/1991 ஏப்ரல் (விசேட) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளிடமிருந்து இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும்:

2. அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகள்

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு மாணவர் ஒருவர் அனுமதி பெறுவதற்கு தகைமையுடையவராக இருக்க வேண்டுமாயின்

I. (அ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25% புள்ளிக்கு குறையாமலும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. நான்கு பாடங்களிலும் மொத்தத் திரட்டு 180 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்று தடவைக்கு மேல் க. பொ. த. (உயர்தர) பரீட்சையை எடுத்திருந்தால் அவர் அனுமதிக்குத் தகைமையற்றவராவார்.

3. பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரி (என். டி. பி) கற்கை நெறிக்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி, சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்வி நிறுவகம், நில அளவியல் படவரைதல் நிறுவகம், கல்விக்கல்லூரிகள் ஆகிய ஏதாவது ஒன்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது கற்கைநெறியெதனையும் பின்பற்றுகின்ற மாணவர் ஒருவர் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய டிப்புளோமா கற்கை நெறிகளைப் பின்பற்றுகின்ற அல்லது அரசாங்க புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்ற மாணவர் ஒருவர் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிஒன்றிற்கு அனுமதி பெறும் பொருட்டு விண்ணப்பிக்க தகுதியற்றவர். இத்தகைய மாணவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

4. இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் கற்கை நெறிகளாவன:

1. ஆங்கிலத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
2. கணக்கியலும் நிதியியலிலும் டிப்புளோமா / சான்றிதழ்
3. உல்லாச பிரயாணத்துறை முகாமைத்துவத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
4. விடுதி முகாமைத்துவத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
5. முயற்சிகள், சிறுதொழில் முகாமைத்துவத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
6. விவசாயத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
7. மனையியல், ஊட்டவளத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
8. கணித விஞ்ஞானத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
9. (உயிரியல் விஞ்ஞானத்தை அல்லது பௌதீக விஞ்ஞானத்தை சிறப்பாகக்கொண்டு) விஞ்ஞானத்தில் டிப்புளோமா / சான்றிதழ்
10. உல்லாசப் பிரயாணம் கலாசாரம் ஆகியவற்றில் டிப்புளோமா / சான்றிதழ்
11. உணவு விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகியவற்றில் டிப்புளோமா சான்றிதழ்கள்

5. அனுமதிக்கான ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் இவ் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும்; விண்ணப்பப்படிவங்கள் பிற விபரங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான பகாரிக்கைகள் யாவும் "நிதிக்கட்டுப்பாட்டாளர்" ப. மா ஆ. என்ற பெயரிற்கு எழுதப்பட்ட 35/- ரூபா பெறுமான காசுக்கட்டளையுடனும் சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத 9"X4" அளவிற்குக் குறையாத கடிதஉறையுடனும் இணைக்கப்பட்டு ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் / அனுமதிகள் இற்கு அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவங்களுக்கான கோரிக்கைகள் அடங்கிய ஒவ்வொரு கடிதமும் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரியின் பெயர்:
2. விண்ணப்பதாரியின் முகவரி:
3. விண்ணப்பதாரி பெற விரும்பும் விண்ணப்பங்களினதும் பிற விபரங்களினதும் மொழி மூலம்:
4. (அ) காசுக்கட்டளை இல:
   (ஆ) திகதி:
   (இ) வழங்கப்பட்ட தபாற் கந்தோர்;
5. விண்ணப்பதாரியின் கையொப்பம்:

7. 1993-02-22 இல் இருந்து 1993-03-17 வரை விண்ணப்பங்கள் தபால் மூலம் மட்டும் வழங்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இபக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

8. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20. உவாட் இடம், கொழும்பு - 7 என்ற முகவரிக்கு 1993-03-19க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இபகவுக்கான அனுமதி" என்ற வாசகம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)

**செயலாளர்,**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
[எ-2931]

ஜனவரி 20ந் திகதி 1993.

# ★ கச்சதீவை இந்தியா திரும்பப் பெறவேண்டும்

## அ. தி. மு. க. எம். பிக்கள் வலியுறுத்து

(புதுடில்லி)

கச்சதீவை இலங்கையிட மிருந்து இந்தியா திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்திய நாடாளுமன்றத்தில் அ. தி. மு. க. எம். பிக்கள் நேற்று இவ்வாறு இந்திய அரசுக்கு வலியுறுத்தினர்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்றது தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் சர்ச்சை எழுப்பப்பட்ட போதே அ. தி. மு. க. எம். பி. க்கள் இந்திய மத்திய அரசுக்கு இவ்வாறு வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவிடயம் தொடர்பாக இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ஜெயந்தி நடராஜனும் கேள்வி எழுப்பினார். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினர் பிடியில் சிக்கி அல்லலுறுவதாகவும் தெரிவித்தார். (இ)

# மொழிபெயர்ப்பாளர்களாக 1000 பட்டதாரிகள்

(கொழும்பு)

1000 பட்டதாரிகளுக்கு மொழிபெயர்ப்பாளர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அரசாங்க, மாகாண மற்றும் நீதி நிறுவனங்களில் இப்பட்டதாரிகள் நியமிக்கப் படவுள்ளனர்.

பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை மூலம் இவர்கள் மொழிபெயர்ப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவர். (க-வி)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 70,205 அகதிகள்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 70 ஆயிரத்து 205 பேர் அகதிகளாக இருக்கின்றார்கள்.

இவர்களில் 1826 குடும்பங்களைச் சேர்ந்த 7431 பேர் அகதிகள் முகாம்களிலும், மற்றவர்கள் நண்பர்கள் வீடுகளிலும் இன்னும் அகதிகளாகவே இருப்பதாக, அண்மையில் வெளியான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (வி-கி-நி)

## அன்னை திரேசா இலங்கை வருகிறார்

(கல்கத்தா)

சமூகசேவகி அன்னை திரேசா இலங்கை வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் அவர் தனது இலங்கை விஜயத்தை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (மி)

## உலக தமிழர் மகாநாடு

(சென்னை)

உலகத் தமிழர் பேரவை மூன்றுநாள் மாநாடு நாளை சென்னையில் ஆரம்பமாகவுள்ளது. இம்மாநாட்டில் 10 நாடுகளிலிருந்து சுமார் 500 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் சென்னைக்கு அருகே உலகத்தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான முயற்சி பற்றியும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (மி)

# ராஜீவ்-ஜே. ஆர். ஒப்பந்தம் அமுல்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக ராஜீவ் - ஜே. ஆர். செய்துகொண்ட ஒப்பந்தத்தை சகல அமுல்படுத்த வேண்டும் என லலித்-காமினி கட்சி தெரிவித்துள்ளது.

சிங்கள பௌத்த உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாதபடி வடக்கு-கிழக்குப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது. (க-சி)

# வெளியிலிருந்து அனுப்பப்படும் பொதிகளில் மோசடி

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பொதிகளில் பெரும் மோசடி இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டு தபால் பொதிகள் வழங்கும்பிரிவிலேயே இம் மோசடி இடம்பெற்றதாகவும் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 13 பொதிகள் குறித்து இரகசியப் பொலிசார், சுங்கப்பகுதியினர் மற்றும், தபால் பகுதியினர் விசாரணையில் ஈடுபட்டுவருவதாகவும் கூறப்படுகிறது. (க-சி)

# வெளிநாட்டு பிரதிநிதிகள் 6ம் திகதி வருவர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து யாழ். நகரைப் பார்வையிடாமல் திரும்பிச் சென்ற தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மீண்டும் எதிர்வரும் 6ம் திகதியளவில் யாழ். வரவுள்ளனர்.

இவர்கள் குமண கப்பலில் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகருடன் வரவுள்ளனர் இவர்கள் ஏற்கனவே வந்தபோது இவர்களை கப்பலை விட்டு இறங்கவிடாமல் தடுக்கும்நோக்குடன் வடபகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (159)

## இன்று

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கான முக்கிய கூட்டமொன்று பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இன்று 4ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுமெனவும் இக்கூட்டத்தில் சகல அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறும் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை அறிவித்துள்ளார். (52)

பல்கலைக்கழக —

# கல்லூரிகளில் சேர்வதற்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களின் மானிய ஆணைக்குழு இணைந்து பல்கலைக்கழக கல்லூரிகள் 1992ம்கல்வி அரையாண்டிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 1990 ஆகஸ்ட் 1991 ஏப்பிறலில் நடைபெற்ற கசேட க பொ. த. (உ. த) பரீட்சைகளில் அங்கீகரிக்கப் பட்ட 4 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து நான்காவது பாடத்தில் 25 வீதத்திற்கு குறையாத புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் 4 பாடங்களிலும் 180 புள்ளிகளுக்கு குறையாது பெற்றிருக்கவேண்டும். —கே

## காணவில்லை

(கிண்ணியா)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கிண்ணியாத் துறையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 5 மீனவர்களைக்காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. —56

# பளைப் பகுதி மக்களுக்கு த. பு. கழகம் உதவிகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மக்கள் வங்கியின் மூலம் பளைப்பகுதியில் 177 பேருக்கு வங்கிக்கடனுதவி திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடைமுறைப் படுத்தி வருகிறது.

கெயர் நிறுவனத்தின் உதவியுடன் 450 பேருக்கு பளையில் விவசாய உதவிகளையும் மேற்படி நிறுவனம்பெற்றுக்கொடுத்துள்ளது.

முகமாலை சமுத்திரன் குடியிருப்பு தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் பொறுப்பேற்கப் பட்டு அங்கு பாலர்பாடசாலை தையற்பயிற்சிநிலையம்குழாய்க் கிணறுபோன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன.

பளையில் 10 பேருக்கு யாய்த்தறி மூலம் வேலைவாய்ப்பும் 30 பேருக்கு இடுகுபின்னும் தொழில் வாய்ப்பும் மேற்படி கழகத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுயசார்பு கடனாக 72 பேருக்கு மூவாயிரம் ரூபா வட்டியில்லாக்கடனாக வழங்கப்பட்டுள்ளதுடன் 300 பேருக்கு மாதத்தில் இரு தடவைகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் உலர் உணவுப்பொருள்களும் வழங்கப்பட்டு வருவதாக மேற்படி கழகத்தின் தென்மராட்சிக்கிளைச் செயலகம் அறிவித்துள்ளது. —ரீ

## தவக்கால நற்சிந்தனை

''ஆண்டவரே! உம்மையன்றி எனக்கு வேறு துணை ஏதுமில்லை'' (எஸ்தர் ஆக (14:14) எஸ்தர் தனக்கு விரைந்து வந்த ஆபத்து வேளையில் ஆண்டவரிடம் சரண் அடைந்தான். உருக்கமாக அவர் பெயரைக் கூவி அழைத்தான். அவரும். அவன் மன்றாட்டிற்கு மனமிரங்கினார். நாமும் எம்மைச் சூழ்ந்துள்ள சகல ஆபத்து வேளையிலும் அவர் ஒருவரே துணை. அவரே எம் அடைக்கலப் பாறை என நம்பிக்கையுடன் சரண் அடைவோம்.

மோ. தார்சிசியஸ்.

# ★ வடக்கு-கிழக்கு பிரச்னையால் எதிர்க் கட்சிகள் கூட்டு முன்னணி அமைக்க முடியாத நிலை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தொடரும் பிரச்னையால் எதிர்க்கட்சிகள் கூட்டு முன்னணி ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்குப் பிரச்னை தொடர்பாக பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுவதையடுத்தேகூட்டுமுன்னணி ஏற்படுத்த முடியாதுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்சனை தொடர்பாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மேற்கொண்டு வரும் முயற்சிக்கு ஸ்ரீ. ல. சு கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பாக பல்வேறு அபிப்பிராயங்களை கட்சிகள் கொண்டுள்ளதால் இக்கூட்டு முன்னணிக்குள் சேர முடியாதென மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-சி)

## இணைப்புக்கு சிறிமா எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து அரசியலமைப் புச் சட்டத்தின் 13வது ஷரத்தைத் திருத்தி மேலும் அதிகாரங்களை வழங்க வேண்டுமென லங்கா சமசமாஜக்கட்சி முன் வைத்துள்ள யோசனையை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக எதிர்த்துள்ளது.

கடந்தவாரம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடந்த கட்சிக் கூட்டத்தில் இந்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சியின் மேற்படி 'இணைப்பு' யோசனையை மக்கள் முன்னணியும் எதிர்த்துள்ளது. (க-சி)

கிரிக்கெட்:

## இங்கிலாந்து வெற்றி

(லண்டன்)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுகளால் இந்திய அணியைத் தோற்கடித்தது.

இந்திய அணி 26 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி 25. 4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி இப்போட்டித் தொடரில் 3-1 என முன்னணி வகிக்கிறது. (க-சி)



இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூசத்தன்று அன்னை தொழிலகத்தினர், சுப்பிரமணியம் சுவாமியார், வடிவேல் சுவாமிகள், வைத்தியபூபதி அண்ணாமலை அவர்கள் ஆகியோரின் திருவுருவப் படங்களை கலைஞானி அறங்காவலர் குழுவினரிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்)

